**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்**

**முன்னிலை—திருமதி. P. தீபா, B.A.B.L.L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர், மாதவரம்**

**2026—ம் ஆண்டு ஜீன் மாதம் 16—ம் நாள் செவ்வாய்கிழமை**

**CC.No.304/2023**

மாநில அரசு உதவி ஆய்வாளர் மூலமாக
எம்3 புழல் காவல் நிலையம்
குற்ற எண்.591/2023

…….குற்றமுறையீட்டாளர்/வாதி

// எதிர் //

1. கணேஷ், வயது.25,
த/பெ. ராஜா,
சாரங்கபணி நகர்,
3வது நகர், மாதவரம்,
சென்னை-60

2. இப்ராஹிம், வயது-24,
த/பெ. பாபு,
எண்.43/3, பட்டினத்தார் கோவில்,
திருவெற்றியூர், சென்னை-19.

.............எதிரிகள்

CASE SUMMARY

| SI.No | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | Accused A1 – 25.12.2023 - 21.02.2024<br>Accused A2 – 25.12.2023 - 20.02.2024 |
| II. | Date of filling of Final Report in court | 29.12.2023 |
| III. | Date of questioning of accused under section 313(1) (a) of Cr.p.c | 10.12.2024 |
| IV | Filling of Miscellaneous petitions and their result | Nil |
| V. | Date of examination in Chief and cross examination of witnesses | PW1- 23.10.2025<br>PW2- 28.04.2026 |
| VI. | Date of examination of accused under section 313(1)(b) of Cr.p.c | 04.06.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay buy superior court and the result thereof | Nil |

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.16 18:54:35 +0530

இவ்வழக்கானது 29.12.2023–ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இறுதியாக 16.06.2026–ம் தேதி அன்று என் முன்பாக விசாரணைக்காக வந்ததில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.தமிழ், அவர்கள் முன்னிலையாகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 08.09.2023–ம் தேதி இரவு சுமார் 21.00 மணிக்கு அவரது இருசக்கர வாகனத்தில் அவரது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எதிரி கணேஷ் மற்றும் எதிரி–2 இப்ராஹிம் ஆகியோர் கூட்டாக ஒன்று சேர்ந்து அவர்களது சுயலாபம் கருதி ஒருமித்த கருத்துடனும் கெட்ட எண்ணத்துடனும் வாதியின் அருகில் சென்று வாதியை இருவரும் வழிமறித்து எதிரி–1 கணேஷ் தான் மறைத்து வைத்திருந்த அருவாவை காண்பித்து உயிர் பயத்தை ஏற்படுத்தி அவரது செல்போனை பறிக்க முயற்சி செய்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 393 IPC r/w 34 IPC பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எம்3 புழல் காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளிடம் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** பின்னர் வழக்கு ஆவணங்களை பரீசிலனை செய்தும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 393 IPC r/w 34 கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் பற்றி வினவ எதிரிகள் குற்றத்தை பொய் என மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் ஆவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**5. <u>அரசு தரப்பு வழக்கின் சாட்சிகளின் சாட்சியத்தின் விபரம் பின்வருமாறு</u>**

**அ)** அ.சா.1 ராஜேஷ், தனது சாட்சியத்தில், தான் தற்போது பெரம்பூரில் குடியிருந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் அளித்ததுதான் என்றும், தேதி ஞாபகம் இல்லை என்றும், செம்டம்பர் மாதம் 2023 ஆம் வருடம் இரவு 9 மணியளவில் கதிர்வேட்டில் எனது இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது இரண்டு நபர்கள் மறித்து அதில் ஒருவர் அரிவாளைக் காட்டியும் மற்றொருவர் தன்னை பின்னால் இருகப்பிடித்தபோது தான் உதறிவிட்டு சென்றுவிட்டேன் என்றும், பின்னர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், மேற்படி புகாரானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடுச் செய்து, தான் புகாரில் கூறியுள்ள நபர்கள் ஆஜர் எதிரிகள் அல்ல என்றும், போலீசார் தன்னை விசாரணைச் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 மாரீஸ்வரன், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது புழல் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் சதீஷ்,

DEEPA P Digitally signed by DEEPA P Date: 2026.06.16 18:54:41 +0530

விஜயகாந்த் ஆகியோர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் சதீஷ் என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 08.09.2023 அன்று 23.30 மணிக்கு ராஜேஷ் அளித்த புகாரினை பெற்று எம்.3 புழல் காவல் நிலைய குற்ற எண். 591/2023 இதச பிரிவு 393 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து, பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ரஜேஷ், மணிகண்ட சுப்பையன், சதீஷ்குமார், அசோக் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் மறுநாள் சாட்சிகளான பூமிநாதன், தினேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்து, பின்னர் எதிரிகளை அவர் தேடிவந்த நிலையில் 25.12.2023 அன்று பகல் 13 மணிக்கு புழல் சைக்கிள் ஷாப் அருகில் வைத்து எதிரிகள் மூவரும் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அதில் எதிரி ஒருவர் இளவர் என்பதால் சிறார் நீதிமன்றத்தில் அவரை ஒப்படைத்து மற்ற இரண்டு எதிரிகளையும் விசாரணை செய்த்தில் 1வது எதிரி குற்ற எண். 894/2023 அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிரிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும், பின்னர் சாட்சிகள் ராஜன், பாலாஜி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கில் எதிரியை கைது செய்த எம்.3 புழல் ஆய்வாளர் விஜயகாந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் விசாரணைக்கு பின்னர் சட்டப்பிரிவானது இதச பிரிவு 393 உ/பி 34 மாறுதல் செய்து, மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடுச் செய்து, பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவு 393 உ/பி 34 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6) இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.2 அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக பாதகமாக அளித்த சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)—ன் கீழ் வினவ எதிரிகள் அந்தப்பகுதிகளை பொய் என மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சி உள்ளதா என்று கேட்டபோது இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>

**இவ்வழக்கின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளாவன எதிரிகளானவர்கள் 393 IPC r/w 34 இதச பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதாகும்.**

இவ்வழக்கில் கடந்த 08.09.2023—ம் தேதி இரவு சுமார் 21.00 மணிக்கு அவரது இருசக்கர வாகனத்தில் அவரது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எதிரி கணேஷ் மற்றும் எதிரி—2 இப்ராஹிம் ஆகியோர் கூட்டாக ஒன்று சேர்ந்து அவர்களது சுயலாபம் கருதி ஒருமித்த கருத்துடனும் கெட்ட எண்ணத்துடனும் வாதியின் அருகில் சென்று வாதியை இருவரும் வழிமறித்து எதிரி—1 கணேஷ் தான் மறைத்து

DEEPA P Digitally signed by DEEPA P Date: 2026.06.16 18:54:45 +0530

வைத்திருந்த அருவாவை காண்பித்து உயிர் பயத்தை ஏற்படுத்தி அவரது செல்போனை பறிக்க முயற்சி செய்து எதிரிகள் காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 393 IPC r/w 34 இதச பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றசாட்டினை பொறுத்து நிரூபணம் செய்வதற்கு அ.சா.1, அ.சா.2 சாட்சிகளை விசாரணை செய்து, மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்து, எதிரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

9) எதிரிகள் தன் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், குற்ற சம்பவத்தை பொறுத்து தங்கள் மீது பொய்யாக இவ்வழக்கானது பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறி வாதிடப்பட்டது.

10) அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப.சா.9 சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டபோதும், அரசு தரப்பில் அ.சா.1 ஆக புகார்தாரர் சாட்சி, அ.சா.2 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டன.

11) இவ்வழக்கின் புகார்தாரர் சாட்சியாக அ.சா.1 அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் அளித்ததுதான் என்றும், செம்டம்பர் மாதம் 2023 ஆம் வருடம் இரவு 9 மணியளவில் கதிர்வேட்டில் எனது இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது இரண்டு நபர்கள் மறித்து அதில் ஒருவர் அரிவாளைக் காட்டியும் மற்றொருவர் தன்னை பின்னால் இருகப்பிடித்தபோது தான் உதறிவிட்டு சென்றுவிட்டேன் என்றும், பின்னர் காவல் நிலையத்தில் புகார் அளித்து, மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுச் செய்து, தான் புகாரில் கூறியுள்ள நபர்கள் ஆஜர் எதிரிகள் அல்ல " என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " என்னை பிடித்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் ஆமாம் என்றும், ஆஜர் எதிரிகள் அந்த நபர்கள் அல்ல என்றால் ஆமாம் என்றும், என்னுடைய புகாரில் என்னிடம் பிரச்சனை செய்த நபர்களின் அங்க அடையாளங்கள் கூறி நான் புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம் என்றும், போலீசார் தன்னை அழைத்து எதிரிகளை அடையாளம் காட்டினார்கள் என்றால் இல்லை " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேற்படி அ.சா.1 புகார்தாரர் சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " ஆஜர் எதிரிகள் அந்த நபர்கள் அல்ல என்றால் ஆமாம் என்றும், போலீசார் தன்னை அழைத்து எதிரிகளை அடையாளம் காட்டினார்கள் என்றால் இல்லை " என்று எதிரிகள் அந்த நபர்கள் இல்லை என்றே சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அரசு தரப்பு அ.சா.2 ஆக புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யப்பட்டார். அவர் தன்னுடைய

DEEPA P
Digitally signed by DEEPA P
Date: 2026.06.16 18:54:51 +0530

சாட்சியத்தில் அ.சா.1-ன் புகாரினை பெற்று சம்பவயிடம் சென்று சாட்சிகளை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 ஆக மாதிரி வரைபடம் தயார் செய்ததினை ஆவணமாக குறியீடு செய்து, சம்பவத்தை பொறுத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பொறுத்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். இருப்பினும் அவர் அலுவல் சாட்சி ஆவார். மேலும் இவ்வழக்கு சம்பவத்தினை பொறுத்து சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் எவரும் அரசு தரப்பில் விசாரணை செய்து, அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே அ.சா.2 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிரான வழக்கு நிரூபணம் செய்ததாக கருதுவது என்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13)** எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 393 IPC r/w 34 இதச பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே எதிரிகள் மேற்படி பிரிவுவின் கீழான குற்றத்தில் குற்றவாளிகள் என்பதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை குற்றவாளிகளுக்கு அளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

<u>முடிவாக</u>

i) எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 393 IPC r/w 34 இதச கீழான குற்றசாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை நல்கி மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து குற்றவியல் நடைமுறைச்சட்டம் 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

ii) இவ்வழக்கின் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

(iii) மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைபத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் வருடம் ஜீன் மாதம் 16-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.06.16 18:54:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்

மாதவரம்

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | திரு.ராஜேஷ் |
| அ.சா.2 | திரு.மாரீஸ்வரன், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.09.2023 | புகார் |
| அ.சா.ஆ.2 | 08.09.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 08.09.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 08.09.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 08.09.2023 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

DEEPA P

Digitally signed by DEEPA P
Date: 2026.06.16 18:55:02 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**மாதவரம்**